**எக்ஸ்பிரஸ்வே டிரான்ஸ்போட் கம்பனி (பிரைவட்) லிமிடட் கம்பனி – 2023**

---

எக்ஸ்பிரஸ்வே டிரான்ஸ்போட் கம்பனி (பிரைவட்) லிமிடட் கம்பனி தொடர்பாக 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு அலுவல்கள் தொடர்பான இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) அம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2007 இன் 07 ஆம் இலக்க இலங்கை கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 150(1) இற்கு இணங்க சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2016 ஆண்டு முதல் 2023 வரையான நிதிக் கூற்றுக்கள் 2024 ஒக்தோபர் 31 திகதி அளவிலும் சமர்ப்பித்திருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கு இணங்க பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16(1) உபபிரிவின் பிரகாரம் அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களினாலும் அந்த நிறுவனம் தொடர்பான வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) உபபிரிவின் பிரகாரம் அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களுக்கான வருடாந்த நிதிக்கூற்றுக்கள் விதிகளின் மூலம் காட்டக்கூடியவாறு காலப் பகுதியொன்றில் அந்த நிறுவனங்களில் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அதிகார சட்டத்தின் 38(1)(ஈ) உபபிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கபட நேரிடுகின்றது என உறுதிப்படுத்த வேண்டியதுடன், மேலும் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும்.

**2. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**2.1 கம்பனி தோற்றுவித்தல்**

2014 ஏப்ரல் 25 திகதிய 2014/11 இலக்கம் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் ''வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் ''எக்ஸ்பிரஸ்வே டிரான்ஸ்போட் கம்பனி (பிரைவட்) லிமிடட்'' நிறுவுவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறல்'' அதற்காக நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அலுவல்கள் கௌரவ அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரேரணைக்காக 2014 மே 08 திகதி 14/0530/505/015 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சின் கீழ் செயற்படுகின்ற முழுமையான அரசுக்கு (திறைசேரி) சொந்தமான கம்பனி ஒன்றாக ''எக்ஸ்பிரஸ்வே டிரான்ஸ்போட் கம்பனி (பிரைவட்) லிமிடட்'' கம்பனி 2007 இன் 07 ஆம் இலக்க இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைப்பதற்கும், புதிய கம்பனி திறைசேரி நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவருவதற்கும் கம்பனியின் உரிமை மற்றும் பணிப்பாளர் சபை நியமனம் செய்தல் ஆகியவற்றிற்கு தேவையான ஏற்பாடுகள் அடங்கிய தயாரிக்கப்படும் அந்த அமைப்பு அகவிதிக்காக திறைசேரியின் பூர்வாங்க் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் இந்த அமைச்சரவை அங்கீகாரம் வழஙகப்பட்டிருந்தது.

2014 ஏப்ரல் 25 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்புகள் என காட்டப்பட்டிருந்தது 1981 இன் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் படி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கம்பனியொன்று நிறுவுவதற்கான ஏற்பாடுகள் காணப்படாமையால் மேற்கூறிய கம்பனி 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் முழுமையான ஆளுகை உரிமை அரசுக்கு (திறைசேரி) சொந்தமான கம்பனி ஒன்றாக

நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சின் கீழ் வரக்கூடியவாறு நிறுவுதல் பொருத்தமானது என குறிப்பிடப்பட்டிருந்தது.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 05 ஆம் பிரிவின் கீழ் 2014 மே 06 திகதி "எக்ஸ்பிரஸ்வே டிரான்ஸ்போட் கம்பனி (பிரைவட்) லிமிடட்" தனியார் கம்பனி ஒன்றென பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், 2015 ஜுன் 17 திகதிய 03/2015 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 1.6 இற்கு இணங்க இந்தக் கம்பனி "E தொகுதி" அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சி ஒன்றென இனங்காணப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முழுமையான உரிமையின் கீழ் இணைந்த கம்பனி ஒன்றென இந்த கம்பனி நிறுவுவதற்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் 2014 ஏப்ரல் 07 திகதி சமர்ப்பித்திருந்த 1551/2014 இலக்கம் கொண்ட பணிப்பாளர் சபைப் பத்திரத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், மேற்கூறிய பணிப்பாளர் சபை பத்திரத்துடன், உத்தேச கம்பனியின் அமைப்பு அகவிதியின் வரைவு ஒன்று சமர்ப்பித்திருக்கவில்லை. அது தொடர்பாக அல்லது குறிப்பிட்ட கம்பனி நிறுவுவதற்கான அமைச்சரவையினால் கொள்கைசார் இசைவு பெற்றுக்கொண்டிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளாமல் அக் கம்பனி நிறுவுவதற்காக எடுக்கப்பட்டிருந்த மேற்கூறிய தீர்மானத்தின் அடிப்படையில் பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) இந்தக் கம்பனி நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் கீழ் செயற்படுகின்ற முழுமையாக அரசுக்கு (திறைசேரி) சொந்தமான கம்பனி ஒன்றென 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட வேண்டும் என 2014 மே 08 திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு நேரொத்திருக்காத வகையில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முழுமையான உரிமையுடனான கம்பனியொன்றென 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் 2014 மே 06 திகதி PV 98435 இலக்கத்தின் மூலம் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டிருந்தது.

(இ) மேற்கூறய அமைச்சரவை தீர்மானத்தின் படி "புதிய கம்பனி திறைசேரியின் நேரடி கண்காணிப்பின் கீழ் காணப்பட வேண்டியதுடன், கம்பனியின் உரிமை மற்றும் பணிப்பாளர் சபை நியமனம் தொடர்பாக தேவையான ஏற்பாடுகள்" அடங்கிய அமைப்பு அகவிதி திறைசேரியின் பூர்வாங்க அங்கீகாரத்தின் மீது பெற்றுக்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபையினால் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) கம்பனியின் செயலாளர் என செயற்படுகின்ற தனியார் கம்பனி ஒன்றினால் 2014 ஏப்ரல் 25 திகதி இந்தக் கம்பனியை தோற்றுவித்தல் தொடர்பாக கம்பனிப் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைப்பு அகவிதியில் பினவரும் விடயங்கள் அடங்கியிருக்கவில்லை.

- புதிய கம்பனி திறைசேரியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் காணப்பட வேண்டும் என.
- கம்பனியின் உரிமை மற்றும் பணிப்பாளர் சபையினை நியமனம் செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் அடங்கிய அமைப்பு அகவிதிக்காக திறைசேரியின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என.
- பணிப்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் பணிப்பாளர் சபை இணைவு

## 2.2 கம்பனியின் ஆளுகை மற்றும் நெறிப்படுத்துதல்

கம்பனியின் ஆளுகை மற்றும் நெறிப்படுத்துவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ள பணிப்பாளர் சபைக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் இருவரும் திறைசேரியின் பிரதிநிதி ஒருவரும் மற்றும் தனியார் துறையின் இரண்டு பிரதிநிதிகளும் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களில் ஒருவர் தலைவராக தெரிவு செய்யப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபையினால் கம்பனியின் உயர் முகாமைத்துவத்திற்காக தலைவர், பொது முகாமையாளர் மற்றும் பொது முகாமையாளரின் கீழ் கணக்காளர் மற்றும் மூன்று முகாமையாளர்களைக் கொண்ட பதவியணியொன்று நியமனம் செய்யப்பட்டிருந்தது. தற்போதைய பணிப்பாளர் சபை அங்கத்தவர் தொடர்பான தகவல்கள் மாத்திரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு முன்னரிருந்த பணிப்பாளர் சபை அங்கத்தர்கள் தொடர்பான தகவல்கள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

## 2.3 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள்

கம்பனியின் பணிப்பாளர் சபையினால் 2016 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் தயாரித்து அங்கீகரித்திருக்காததுடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பணிப்பாளரினால் 2023 ஒக்தோபர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றொன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் படி 2023 ஒக்தோபர் 31 திகதியில் உள்ளவாறு மற்றும் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றின் படி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பின்வருமாறு ஆகும்.

| விபரம் | 2023 ஒக்தோபர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளகக் கணக்காய்வாளரினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் படி பெறுமதி (ரூபா) | 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றின் படி பெறுமதி (ரூபா) | வித்தியாசம் (ரூபா) |
|---|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | 3,398,677 | 168,027,897 | (164,629,220) |
| மொத்த உரிமைகள் | (132,506,549) | 8,911,197 | (141,417,746) |
| பண பெறுவனவு இலங்கை போக்குவரத்துச் சபை | 56,284,248 | - | 56,284,248 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 79,620,978 | 159,116,699 | (79,495,721) |

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி வருமானம் மற்றும் செலவுகள் பின்வருமாறு ஆகும்.

| விபரம் | 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி பெறுமதி (ரூபா) |
|---|---|
| வருமானம் | 78,760,637 |
| விற்பனைக் கிரயம் | (70,455,661) |
| மொத்த இலாபம் | 8,304,976 |
| ஏனைய வருமானங்கள் | 1,080,402 |

| | |
|---|---|
| **செலவுகள்** | (24,511,695) |
| **இலாபம் / (நட்டம்)** | (15,126,316) |

அதேபோல் 2015 திசெம்பர் 31 திகதி முடிவடைந்திருந்த ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் மறுக்கப்பட்டிருந்தது.

**2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

(அ) 2015 திசெம்பர் 31 திகதிக்கு நேரொத்ததாக 2023 ஒக்தோபர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட சொத்துக்கள் / பொறுப்புக்கள் / உரிமைகளின் பெறுமதிகளில் மாற்றங்கள் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூல சான்றுகள்.

(ஆ) 2016 – 2023 காலப் பகுதியில் உழைக்கப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவுகள் மற்றும் அவற்றை உறுதிப்படுத்துவற்கான சான்றுகள்.

(இ) 2023 ஒக்தோபர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலைமை கூற்றின் படி செயற்திட்டம் ஒன்றிற்காக வெளித்தரப்பினர் ஒருவருக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 6 மில்லியன் தொகை தீர்க்கப்பட்டிருந்த போதிலும், அதனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள்.

(ஈ) Smart Bus Halt – 3000 செயற்திட்டத்திற்காக 2022 திசெம்பர் 04 மற்றும் 10 ஆகிய திகதிகளில் முறையே வெளித்தரப்பினர்களிடம் ரூபா 2 மில்லியன் மற்றும் ரூபா 13 மில்லியன் தொகை கம்பனி பெற்றிருந்த போதிலும், அவ்வாறான செயற்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள்.

**2.5 கம்பனி தொடர்ந்து நிலைத்திருத்தல்**

எக்ஸ்பிரஸ்வே டிரான்ஸ்போட் கம்பனி (பிரைவட்) லிமிடட் தொடர்பாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2023 மே 26 திகதிய 28/2023 இலக்கம் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2023 ஜூன் 26 திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும், அமைச்சரவை விஞ்ஞாபத்தில் 3.1, 3.3 மற்றும் 3.4 பிரேரணைகள் தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கீழ் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகளில் காட்டப்பட்டிருந்தவாறு தேவையான நடவடிக்கைகள் எடுக்கும் படி விதித்திருந்த காரணத்தினால் கம்பனியின் தொடர்ந்து நிலைத்திருத்தல் தொடர்பாக கேள்விக்குறியாக உள்ளது.

(3.1) கம்பனிக்கு சொந்தமான அனைத்து பஸ் வண்டிகளும் இலங்கை போக்குவரத்து சபைக்கு ஒப்படைத்தல் மற்றும் ஏனைய அனைத்துச் சொத்துக்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு திருப்பி வழங்குதல் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் சுயவிருப்பு ஓய்வு பெறும் அடிப்படையில் நட்டஈடு வழங்குதல் ஆகிய பிரேரணைக்காக நிதியமைச்சரினால் கம்பனியின் அனைத்து ஊழியர்களும் சுயவிருப்பு ஓய்வு பெறும் முறையொன்றினை கடைபிடிக்காமல் கம்பனியின் அனைத்து ஊழியர்களும் இலங்கை போக்குவரத்து சபைக்கு இணைப்பதற்கும் மற்றும் பஸ் வண்டிகள் உட்பட அனைத்துச் சொத்துக்களும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு உரித்தாக்குவதற்கு பரிந்துரக்கப்பட்டிருந்தது.

(3.3) வெளித்தரப்பினரின் அனைத்து கடன்கள் மற்றும் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு இலங்கை போக்குவரத்து சபையின் நிதியம் பயன்படுத்துவதற்கு நிதியமைச்சரினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

(3.4) அதேபோல் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நியமனம் செய்யப்பட்டுள்ள ஒழித்துக்கட்டுனர் மூலம் கம்பனியை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

## 2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் | | | |
| (i) | பிரிவு 133 உபபிரிவு (1) மற்றும் (2) மற்றும் பிரிவு 144 | ஒவ்வொரு பஞ்சாங்க வருடத்திற்கு ஒருமுறை கம்பனியின் பணிப்பாளர் சபையினால் பங்குதாரர்களின் வருடாந்தக் கூட்டம் அழைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2014 ஆண்டின் பின்னர் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 133 மற்றும் 187 (1) இற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | பிரிவு 150(1) | கம்பனியின் ஐந்தொகை திகதியின் பின்னர் 06 மாதங்களுக்குள் அல்லது கம்பனிப் பதிவாளரினால் முடிவு செய்யும் விதத்தில் நீடிக்கப்பட்ட ஏதேனுமொரு காலப்பகுதியினுள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 ஆண்டு முதல் கம்பனி நிதிக்கூற்றுக்கள் தயாரித்திருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் விரைவாக தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். அந்தப் பொறுப்பினை புறக்கணித்துள்ள உத்தியோகத்தர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | பிரிவு 166 | கம்பனியின் பணிப்பாளர் சபையினால் கம்பனியின் ஐந்தொகை திகதியின் பின்னர் 06 மாதங்களுக்குள் அந்த திகதியில் முடிவடையும் கணக்குக் காலப் பகுதியினுள் கம்பனியின் அலுவல்கள் தொடர்பாக வருடாந்த அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். எனினும், கம்பனி 2016 ஆண்டின் பின்னர் வருடாந்த அறிக்கைகள் தயாரித்திருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் வருடாந்த அறிக்கை விரைவாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்தப் பொறுப்பினை புறக்கணித்துள்ள உத்தியோகத்தர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021.11.16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான நல்லாளுகை மீதான வழிகாட்டல் கோவை | | | |
| (i) | பிரிவு 2.2.2 | தலைவரினால் மாதந்தோரும் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்த வேண்டும். அதன்படி, கம்பனி ஆரம்பிக்கப்பட்ட 2014 மே மாதம் முதல் 2023 திசெம்பர் 31 திகதி வரை, குறைந்த அளவு 116 பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், கம்பனி ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் 2023 ஜுலை மாதம் வரை 30 பணிப்பாளர் சபை கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |
| (ii) | அத்தியாயம் 5 | செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் குறிப்பிட்ட ஆண்டிற்குரிய வருடாந்த பாதீட்டுடன் நிதி எதிர்வுகூறல் உட்பட ஐந்து வருட காலத்திற்கான கம்பனியின் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மூலோபாயத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட வரிசை அமைச்சின் செயலாளர் ஊடாக திறைசேரிச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன், வர்த்தக சுற்றாடல் மாற்றங்களுக்கு இணங்க ஒவ்வொரு ஆண்டிலும் அந்த திட்டத்தை நாளதுவரை ஆக்க வேண்டியிருந்த போதிலும், அடுத்த வருடம் ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | | |
| (iii) | பந்தி 6.6 | அனைத்துக் கம்பனிகளினாலும் வருடாந்த அறிக்கையின் வரைவு ஒன்று நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கம்பனி 2016 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | அந்தப் பொறுப்பினை புறக்கணித்துள்ள உத்தியோகத்தர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (iv) | பந்தி 6.7 | வருடாந்த பண்டக் கணிப்பீடொன்று மேற்கொண்டு அந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | பண்டக் கணிப்பீட்டு அலுவல்கள் உடனடியாக மேற்கொண்டு பற்றாக்குறைகள் மற்றும் மிகைகளை இனங்காண வேண்டும். |
| (இ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் (1998 திசெம்பர் 31 திகதி வரையான திருத்தங்கள் உட்பட) பிரிவு 15 | சேவை வழங்குனர் ஊழியரின் உழைப்புக்களில் இருந்து தொடர்ந்து வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய பங்களிப்புத் தொகை நிதியத்திற்கு செலுத்த வேண்டும். எனினும், 2020 மார்ச் முதல் 2023 ஜுன் வரை ஊழியர்களுக்கு | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஊழியர் சேமலாப நிதியம் செலுத்த வேண்டியதுடன், மிகை விதிப்புக்கு பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அந்தத் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலுத்த வேண்டியிருந்த நிலுவை ஊழியர் சேமலாப நிதியப் பெறுமதி ரூபா 23.34 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், இதில் அடங்கிய செலுத்த வேண்டிய மிகை விதிப்பு ரூபா 7.3 மில்லியன் தொகையும் காணப்பட்டது. | | தொகையை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரிவு 16 | சேவை வழங்குனரினால் ஊழியர்களை தனது சேவைக்காக ஈடுபடுத்தும் ஒவ்வொரு மாதத்திற்குமாக, அந்த மாதத்தினுள் அவர்கள் உழைக்கும் மொத்த உழைப்பில் 3 சதவீத பங்களிப்புத் தொகை தொடர்ந்து வரும் மாதத்தின் இறுதித் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் நிதியத்திற்கு செலுத்துவதற்கு சேவை வழங்குனர் கீழ்படிய வேண்டும். எனினும், 2021 மே முதல் 2023 ஜூன் வரை ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பெறுமதி ரூபா 1.7 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அதில் அடங்கியுள்ள செலுத்த வேண்டிய மிகை விதிப்பு ரூபா 0.63 மில்லியன் தொகையும் காணப்பட்டது. | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டியதுடன், மிகை விதிப்புக்கு பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அத்தொகையினை அறவீடு செய்யப்பட வேண்டும். |

**3. கம்பனியை முடிவுறுத்தல் தொடர்பான அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துதல்**

(அ) போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2023 மே 26 திதகிய 28/2023 இலக்கம் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளவாறு கம்பனிக்கு சொந்தமான அனைத்து பஸ் வண்டிகள் மற்றும் வீதிப் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தில் 15 சதவீதம் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு வழங்குவதற்கு 2023 ஜூன் 26 திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, கம்பனி உரித்தான வரிசை அமைச்சுச் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 216 மில்லியன் பெறுமதியான 20 பஸ் வண்டிகள் சுவாதீனமாக பெறுமதி மதிப்பீட்டாளரால் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு உரித்தாக்களுக்கு பதிலாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அனைத்து பஸ் வண்டிகளும் ரூபா 109.4 மில்லியன் தொகைக்கு பெறுமதி மதிப்பீடு செய்து மற்றும் அதிவேகப் பாதையின் ஒட்டுமொத்த ஓட்ட தவணைகளில் 15 சதவீதம் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்கூறிய ‘அ‘ இல் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நியமனம் செய்யப்பட்டுள்ள பணிப்பாளர் சபையை கலைத்தல் மற்றும் ஒழித்துக்கட்டுனர் ஊடாக கம்பனியை முடிவுறுத்துவதற்கு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சுச் செயலாளர் கம்பனிக்கு விதிக்கப்பட்டிருந்தது. எனினும் ஒரு வருடத்தை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் இந்தத் தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) அதேபோல், மேற்கூறிய அமைச்சரவை தீர்மானத்தின் படி சுயவிருப்பத்துடன் ஓய்வு முறையொன்று உட்பட (தொழிற்பாட்டுக் குத்தகை கடன் இன்றி) கம்பனியினால் செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் என ரூபா 77.07 மில்லியன் தொகை இனங்காணப்பட்டிருந்தது. அந்தப் பெறுமதியில் ரூபா 18.31 மில்லியன் தொகை மாத்திரம் 2024 ஜனவரி 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்பட்டிருந்தது. மேலும், தீர்க்க வேண்டியிருந்த பெறுமதி ரூபா 58.76 மில்லியன் தொகை என அவதானிக்கப்பட்டது.

(ஈ) போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2023 திசெம்பர் 13 திகதிய 76/2023 இலக்கம் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை இலக்கம் 3.1 மற்றும் 3.2 இன் படி கம்பனியின் ஒட்டுமொத்த ஊழியர் எண்ணிக்கையான 42 இல் 29 தொகை இலங்கை போக்குவரத்துச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி இணைப்பதற்கும், தகைமைகள் காணப்படாத 13 ஓட்டுனர்கள் மற்றும் நடத்துனர்கள் அவர்களுக்காக தனிப்பட்ட முறையில் என இலங்கை போக்குவரத்து சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அவர்கள் ஓய்வுபெறும் வரை தங்க வைப்பதற்கும் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு இணைக்கும் போது சுயவிருப்புடன் ஓய்வுபெறும் திட்டத்தின் கீழ் ஓய்வுபெறுவதற்கு விரும்பம் தெரிவித்துள்ள 13 ஊழியர்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 10.93 மில்லியனிற்கான நட்டஈட்டுத் தொகை இலங்கை போக்குவரத்து சபையினால் மேற்கொள்வதற்கும் 2024 ஜனவரி 08 திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி, 29 ஊழியர்கள் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு இணைக்கப்பட்டிருந்ததுடன், சுயவிருப்புடன் ஓய்வுபெறும் திட்டத்தின் கீழ் ஓய்வு பெறுவதற்காக விரும்பம் தெரிவித்திருந்த ஊழியர்களுக்காக செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 5.74 மில்லியனிற்கான மீதியான நட்டஈட்டுத் தொகை 2024 ஒக்தோபர் 31 திகதி அளவிலும் செலுத்தியிருக்கவில்லை.